# II. பொருளாதார நிதிப்போக்குகள் — 1973.

## (அ) தேசிய உற்பத்தியும் செலவும்.

### 1. முகவுரை

***மொத்தத் தேசிய உற்பத்தி***

1973இன் நிலையான (1959) விலையிலான மொத்த தேசிய உற்பத்தி 1972இன் வளர்ச்சி வீதமான 2.6 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 3.5 சத வீதத்தால் அதிகரித்தது. இவ்வாறாக 1972, 1973 ஆகிய இரு ஆண்டுக்கான ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் 1972-1976 ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளான ஆண்டொன்றுக்கு 6 சத வீதம் கொண்ட திட்டமிடப்பட்ட வளர்ச்சி வீதத்துக்கு மாறாக 3·1 சதவீதமாக விளங்கியது.

1973இன் நடு ஆண்டிற்கான குடித்தொகை 13215 இலட்சமாகுமெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. இது முன்னைய ஆண்டிற்கு மாறான 1.76 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். 1972இல் குடித்தொகை 1.97 சத வீதத்தால் அதிகரித்தது.

1973இல் தலா ரீதியிலான மொத்தத் தேசிய மெய் உற்பத்தி, 1972இன் மிகச் சிறிய வளர்ச்சியான 0.6 சத வீதத்துடன் ஒப்பிடும்போது 1.7 சத வீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை 11 (அ) 1, கைத்தொழில் அடிப்படையிலான (1959) காரணிச் செலவு விலையில் தேசிய உற்பத்தியையும் ஒவ்வொரு துறையும் மொத்தத் தேசிய உற்பத்திக்களித்த பங்கினையும் தருகின்றது.

ஒவ்வோராண்டுக்குமுரிய மெய்த் தேசிய உற்பத்தியை 1972இன் ரூ 2,510 இலட்சம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1973இல் ஏற்பட்ட மாற்றம் ரூ. 3530 இலட்சமாகும். மொத்தத் தேசிய உற்பத்திக்கு விவசாயத்திலிருந்தே மிக உயர்ந்த உதவு தொகை கிடைக்கப்பட்டது. அது 1972இன் 34.7 சத வீதத்துடன் ஒப்பிடும்போது 1973இல் 32.6 சத வீதமானதாகும். 1973இல் விவசாயத்தின் உதவு தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குத் தெங்கு உற்பத்தி 34.7 சத வீதத்தால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமை முக்கிய காரணமாகும். தேயிலை உற்பத்தி 1 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இன்னும் உரம் போன்ற இன்றியமையாத உள்ளீடுகளின் செலவு அதிகரித்தமையால் அவற்றின் பாவனை குறைவடைந்தது. மறுபுறம் உப உணவுப் பயிர்களினதும் சிறிய ஏற்றுமதிப் பயிர்களினதும் வெளியீடு கணிசமான அதிகரிப்புகளைக் காட்டினாலும் இவ்வதிகரிப்புகள் தெங்கு வெளியீடுகளின் வீழ்ச்சியை எதிரீடு செய்யத்தகுந்தளவு பெருந் தொகையானதாய் விளங்கவில்லை. முழுமையாகக் கூறின் விவசாயத் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூ. 900 இலட்சமாக விளங்கியது.

சுரங்கத் தொழில், பார்குழித் தொழிலின் பங்கு 1972இன் 0.7 சத வீதத்திலிருந்து 1973இல் 2.6 சத வீதத்திற்கு அதிகரித்தது, தயாரிப்புத் தொழிலின் பங்கு 14.0 சத வீதத்திலிருந்து 1973இல் 13.6 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை II (அ) 1

## நிலையான (1959) காரணிச் செலவு விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான அமைப்பு

| துறைகள் | 1959 | | 1972 | | 1973 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், வேட்டையாடுதல், கடற்றொழில் ... | 2,302 | 39.1 | 3,478 | 34.7 | 3,388 | 32.6 |
| 2. சுரங்கத் தொழிலும், பார்க் குழித்தொழிலும் ... | 31 | 0.5 | 68 | 0.7 | 266 | 2.6 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 682 | 11.6 | 1,401 | 14·0 | 1,417 | 13.6 |
| 4. கட்டடவாக்கம் ... | 283 | 4.8 | 505 | 5.0 | 516 | 4.9 |
| 5. மின்சாரம், வாயு, நீர், சுகாதாரப் பணிகள் ... | 10 | 0.2 | 31 | 0.3 | 31 | 0.3 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், செய்தித்தொடர்பு ... | 541 | 9.2 | 988 | 9.8 | 1,019 | 9.8 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 801 | 13.6 | 1,327 | 13.2 | 1,383 | 13.3 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, மெய் ஆதனங்கள் | 51 | 0.9 | 136 | 1.4 | 142 | 1.4 |
| 9. குடியிருப்புகளின் உடைமை .. | 201 | 3.4 | 313 | 3.1 | 318 | 3.1 |
| 10. பொது நிருவாகமும், பாதுகாப்பும் | 301 | 5.1 | 522 | 5.2 | 567 | 5.5 |
| 11. பணிகள் .. | 728 | 12.3 | 1,334 | 13.3 | 1,379 | 13.3 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி... | 5,930 | — | 10,102 | — | 10,426 | — |
| 13. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் ... | - 37 | - 0.6 | - 72 | - 0.7 | - 44 | - 0.4 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 5,893 | 100.0 | 10,030 | 100.0 | 10,383 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ஏற்றுமதி விலை மட்டத்துடன் ஒப்பிடும்போது இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட கூரிய அதிகரிப்பினால் ஏற்றுமதி வருவாய்களைக்கொண்டு செய்யப்படும் கொள்வனவுச் சக்தி 1959இன் விலைகளை அடியாகக்கொண்டு ரூ. 11,700 இலட்சங்களால் குறைவடைந்ததன் காரணத்தால் 1973இல் வர்த்தக மாற்று வீதம் மேலும் மோசமடைந்தது. இவ்விதம் வர்த்தக மாற்று வீதத்தில் ஏற்பட்ட பாதக நிலைகளுக்கேற்ப சீராக்கப்பட்ட மெய்த் தேசிய உற்பத்தி 1972இன் 2.7 சத வீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.7 சத வீதத்தால் அதிகரித்தது.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தியை 1972இன் 7.1 சத வீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 19.6 சத வீதத்தால் அதிகரித்தது. நடைமுறை விலைகளில் தலா ரீதியில் மொத்தத் தேசிய உற்பத்தி 17 8 சத வீதத்தால் அதிகரித்தது.

**மூலவளங்களும் பயன்களும்.**

அட்டவணை 11 (அ) 2. இறக்குமதிகள், நுகர்வினுல் அவற்றின் பயன்பாடு, மூலதன உருவாக்கம், ஏற்றுமதிகள் என்பவற்றின் மொத்த மூலவளங்களைக் காட்டுகின்றது, பண ரீதியில் 1973இல் மொத்த மூலவளங்கள், 1972இனதிலும்பார்க்க 21.6 சத வீதத்தால் அதிகரித்து, ரூ. 195,920 இலட்சங்களுக்கு வகை கூறியது. நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி, 1972இன் ரூ136,340 இலட்சங்களுக்கு மாருக, ரூ.167,410 இலட்சமாக விளங்கி, 22.8 சத வீத அதிகரிப்பைக் காட்டியது. பொருட்களினதும், காரணியல்லாச் சேவைகளினதும் இறக்குமதிப் பெறுமதி 15.0 சத வீதத்தால் அதிகரித்தது.

**அட்டவணை II (அ) 2**

**மொத்த வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்**

| விடயங்கள் | 1971 | 1972 | 1973 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | 1972 | 1973 |
| **அ. வளங்கள்** | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 12,744 | 13,634 | 16,741 | + 7.0 | + 22.8 |
| பொருட்களினதும் காரணிகளல்லாத பணிகளினதும் இறக்குமதிகள் ... | 2,365 | 2,480 | 2,851 | + 4.9 | + 15.0 |
| மொத்தம் ... | 15,108 | 16,114 | 19,592 | + 6.7 | + 21.6 |
| **ஆ. பயன்பாடு** | | | | | |
| நுகர்வு ... | 10,639 | 11,697 | 14,246 | + 9.9 | + 21.8 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 2,249 | 2,118 | 2,630 | — 5.8 | + 24.2 |
| பொருட்களினதும், காரணிகளல்லாத பணிகளினதும் இறக்குமதிகள் | 2,220 | 2,300 | 2,716 | + 3.6 | + 18.1 |
| மொத்தம் ... | 15,108 | 16,114 | 19,592 | + 6·7 | + 21.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1972இன் 5.8 சத வீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1973இல் நுகர்வுக் கேள்வி 21.7 சத வீதத்தால் அதிகரிக்க மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 24 2 சத வீதத்தால் அதிகரித்தது. முந்திய ஆண்டுகளைப் போலவே 1973ஆம் ஆண்டிலும் கிடைக்கத்தக்க மூலவளங்களிலும் பார்க்க, மொத்தக்

கேள்வியின் போக்கு மிக உயர்ந்ததாகக் காணப்பட்டது. 1972இன் 2.3 சதவீதத்துடன் ஒப்பிடும்போது மொத்த உள்நாட்டுச் செலவானது மொத்த தேசிய உற்பத்தியைவிட 1.5 சத வீதத்தால் உயர்ந்தது. இவ்வீழ்ச்சி வெளிநாட்டுக் கடன் பாடுகளாலும் ஒதுக்குகளை எடுப்பனவு செய்ததினாலும் ஈடுசெய்யப்பட்டது.

## 2. உற்பத்திப் போக்குகள்.

### வேளாண்மை

#### தேயிலை.

1973இல் தேயிலை உற்பத்தி 1972இற்கு மாறாக 50 இலட்சம் இருத்தலால் அல்லது 1.1 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து 4,660 இலட்சம் இருத்தலாக விளங்கியது. பிரதேச வகைகளில், தாழ் பிரதேசத் தேயிலைகள் மட்டுமே அதிகரிப்புகளைக் காட்டின தேயிலை வெளியீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு, பாதகமான காலநிலை நிலைமைகளின் விளைவினால் முக்கியமாக ஏற்பட்டதாகும்.

1972இன் 597,645 ஏக்கருடன் ஒப்பிடும்போது 1973இன் இறுதியில் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ்ப்பட்ட மொத்தப் பரப்பு 598,740 ஏக்கர் ஆகும். 1973 இறுதியில் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்தப்பரப்பு 59,296 ஏக்கர்களாகும். அவற்றுள் 1972இன் 6,418 ஏக்கருடன் ஒப்பிடுகையில் 1973இல் 5,953 ஏக்கர்கள் மீள்நடுகை செய்யப்பட்டன. 1972இல் ரூ. 217 இலட்சம் வழங்கப்பட்டிருக்கும் போது 1973இல் மீள்நடுகை மானியத் திட்டத்தின்கீழ் மானியங்களாக ரூ. 219 இலட்சம் வழங்கப்பட்டது.

தேயிலைத் தொழிற்சாலை நவீனமாக்கும் திட்டம் 1973இலும் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. இவ்வாண்டுக்காலத்தில் இத்திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்ட மொத்தக் கடன்கள் ரூ 113 இலட்சமாகும்.

#### றப்பர்.

1973இல் றப்பர் உற்பத்தி 1972இலும் பார்க்க 10 சத வீதம் கொண்ட அதிகரிப்பான 3,400 இலட்சம் இருத்தலாகுமெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஆண்டுக்காலப்பகுதியின் கவர்ச்சியான உயர் விலைகளால் அளிக்கப்பட்ட ஊக்கங்கள் வழிவகுத்தன எனலாம். 1972இன் 658 இருத்தலுடன் ஒப்பிடுகையில் ஏக்கருக்கான விளைச்சல் 1973இல் 694 இருத்தலாகும்.

றப்பர்க் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி 1972இன் இறுதியில் பயிரிடப்பட்ட 5,67,060 ஏக்கருடன் ஒப்பிடுகையில், 1973இன் இறுதியில் றப்பர்ப் பயிர்ச்செய்கையின் கீழ்ப்பட்ட பரப்பளவு 5,65,000 ஏக்கராகும். 1973இன் இறுதியில் 4,964 ஏக்கர்கள் மீள்நடுகை செய்யப்பட்டு மொத்த மீள்நடுகைப்பரப்பு 3,08,502 ஏக்கராக விளங்கியது. இது 1972இல் மீள்நடுகையிடப்பட்ட 8,742 ஏக்கர்களிலிருந்து பெரிதும் 43 சதவீதத்தால் குறைந்ததைக் காட்டுகிறது. 1973இல் 459 ஏக்கர்கள் மட்டுமே

புதிதாகப் பயிரிடப்பட்டன. இவ்வாண்டில் றப்பரின் கீழ்ப்பட்ட மொத்தப் பரப்பளவில் 86.7 சதவீதம் மட்டுமே பால் எடுப்பதன் கீழ்ப்பட்ட பரப்பாக விளங்கியதுடன் 1972ஆம் ஆண்டிலும்பார்க்க இது 3 2 சதவீதம் அதிகமாக வும் காணப்பட்டது

றப்பர் மீள்நடுகை மானியத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட பணம் 1972இன் ரூ. 182 இலட்சங்களுக்குமாறாக 1973இல் ரூ. 158 இலட்சமாகும்.

தெங்கு.

தெங்கு உற்பத்தி 1972இன் 29,630 இலட்சம் காய்களுடன் ஒப்பிடும் போது 1973இல் 19,350 இலட்சம் காய்கள் எனத் தற்காலிகமாக மதிப்பிடப் பட்டது. இது வெளியீட்டில் 34.7 சதவீதம்கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. 1972-73இல் தென்னை வளரும் பிரதேசங்களில் நிலவிய கடும்வரட்சி நிலைமைகளும், உரப்பாவனையைக் குறைத்தமையும் முக்கிய மாக இவ்வீழ்ச்சிக்கு வழிகோலின.

மத்திய வங்கியினால் மதிப்பிடப்பட்டபடி, தெங்கு உற்பத்தி உள்நாட்டு நுகர்வுகளுக்கும் தெங்குப்பொருட்களின் ஏற்றுமதிகளுக்கும் சமமான காய்களின் அளவாகும். 1973 மார்ச்சிலும், ஏப்பிரலிலும் முறையே நடைமுறைக்குவந்த கொப்பரா, தேங்காய் எண்ணெய் என்பவற்றின் ஏற்றுமதிகளின் மீதான தடை யினால் 1973 இன் உற்பத்தி எவ்வாறாயினும் வழமையான அடிப்படையில் மதிப்பிடமுடியாததாய் விளங்கியது. எனினும் 1973இன் உற்பத்தி தெங்கு ஆணையாளர் பதிவேடுகளின்படியும், தேங்காய்களின் உள்நாட்டு நுகர்வின்படி யுமான கொப்பரா, தேங்காய்த்துருவலுக்குச் சமமான காய்களின் தொகையினால் மதிப்பிடப்பட்டது. தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் மதிப்பீடுகளின்படி, 1972இல் வழங்கப்பட்ட உர அளவு 45,723 தொன்களாக விளங்கும்போது இவ்வாண்டில் வழங்கப்பட்டது 30,539 தொன்களுக்கு வகைகூறியது. 1973இல் பெறப்பட்ட உரம் 1972இற்குமாறாக 33 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

நெல்.

1973இல் நெல் உற்பத்தி 629 இலட்சம் புசல்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. இது 1972உடன் ஒப்பிடும்போது உற்பத்தி பெரிதும் மாற்ற மடையவில்லையெனக் காட்டுகிறது. 1973இன் சிறுபோகத்துக்கான உற்பத்தி 1972இன் தொடர்பான போகத்தின் 206 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகை யில் 209 இலட்சம் புசல்களாகுமெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டபோது 1972/73 மகாபோகத்துக்கான உற்பத்தி 1971/72இன் அதேயளவினதாக 420 இலட்சம் புசல்களென மதிப்பிடப்பட்டது. 1972/73 பெரும்போகத்தில் ஒரு ஏக்கரின் சராசரி விளைச்சல் 45.5 புசல்களாகும். ஒப்புநோக்குகையில் 1971/72 இன் விளைச்சல் 48.1 புசல்களாகும்.

நெல் உபதுறையின் நடவடிக்கைகள் மேலதிக விவரங்களுடன் பகுதி 11 (ஆ) 1 (11) (அ) இல் தரப்பட்டுள்ளது.

நெற்சந்தைப்படுத்தும் சபை உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்த நெல்லின் அளவு 1972இன் 261 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகையில் 1973இல் 229 இலட்சம் புசல்களாகும்.

உப-உணவுப் பயிர்களும். கால்நடைகளும்.

1973இல் உப-உணவுப் பயிர்களின் வெளியீட்டின் பெறுமதி 1972இன் 4.4 சதவீதம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் உண்மையில் 34.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கவேண்டுமென மதிப்பிடப்பட்டது. நடைமுறை விலைகளில் 1972இன் 22.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் உற்பத்தி 138.6 சதவீதத்தால் உயர்ந்தது. மரவள்ளி, மிளகாய், சோளம், குரக்கன், பயறு, மிளகு என்பவற்றின் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன.

சிறிய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. நடைமுறைவிலைகளில் அதிகரிப்பு 69 சதவீதமாக விளங்கியபோது உண்மை நியதிகளின்படி வெளியீடு 32 சதவீதத்தால் அதிகரித்தது. சிறிய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியில் ஏற்பட்ட இவ்விரும்பத்தக்க போக்கிற்கு உற்பத்தியாளர்களுக்கு உயர்ந்த விலைகள் கிடைத்தமையும், அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட ஊக்கமும் வழிகோலின எனலாம்.

நடைமுறை விலைகளில் உற்பத்தி 7 5 சதவீதத்தால் உயர்ந்திருக்கும்போது கால்நடை உற்பத்தி உண்மையில் 3.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முட்டை உற்பத்தி 1972இற்குமேலாகக் கிட்டத்தட்ட 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1973இல் பால் உற்பத்தி 1972இன் 3,004 இலட்சம் போத்தல்களிலிருந்து 3,056 இலட்சம் போத்தல்களுக்கு எல்லையளவால் அதிகரித்து விளங்கியது.

மீன்.

மீன் உணவு உற்பத்தியானது 0.9 சதவீதத்தால் அதிகரித்தது. இத்தகைய எல்லையளவான அதிகரிப்புக்கு தனியார்துறையும் மீன்பிடிக் கூட்டுத்தாபனமும் சொந்தமாக வைத்திருந்த வள்ளங்களின் இயக்கம் உப-உறுப்புக்களினதும், இயக்கக் கருவிகளினதும் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டமையே காரணமாகும்.

சுரங்கத்தொழிலும் பார்க்குழித்தொழிலும்,

1973ஆம் ஆண்டில் இத்துறைக்கான வெளியீடு கணிசமான அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. இவ்வாண்டில் உண்மை நியதிகளின்படி கூட்டப்பட்ட பெறுமதி 1972ஆம் ஆண்டில் 1.4 சதவீதமாக இருந்து 1973ஆம் ஆண்டில் 294.4 சதவீதமாக அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இத்துறை மூலம் கிடைத்த பங்கானது 1972ஆம் ஆண்டில் 0.7 சதவீதமாக மிகச் சிறிதாக விளங்கியமையில் இருந்து 1973ஆம் ஆண்டில் 2.6 சதவீதமாக அதிகரித்தது. இதற்கு இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் இரத்தினக்கல் ஏற்றுமதி அதன் கையிருப்பின்படி இரத்தினக்கற் உற்பத்தி அதிகரித்தமையே காரணமாகும். 1972ஆம் ஆண்டில் ஏற்றுமதிசெய்யப்பட்ட இரத்தினக்கற்களின் பெறுமதி ரூ. 123 இலட்சமாக விளங்க, 1973ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி

யானது ரூ. 2,342 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது இத்தகைய விரிவான வளர்ச்சிக்கு வரிச்சலுகைகள் மாற்றக்கூடிய ரூபாய்க் கணக்குச் சலுகைகள், இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தால் ஆற்றப்பட்ட பணிகள் போன்ற தூண்டுதல்களே காரணமாகும்.

**தயாரிப்புத் தொழில்.**

சுரங்கத் தொழில், பார்க்குழித்தொழில், மின்சாரம், வாயு தவிர்ந்த தயாரிப்புக் கைத்தொழிற்துறையின் வெளியீடானது 1972ஆம் ஆண்டில் 1.6 சதவீத அதிகரிப்புடையதாகக் காணப்பட இவ்வாண்டில் 1.2 சதவீதமாகக் காணப்பட்டது. தொழிற்சாலைக் கைதொழில்களின் கூட்டப்பட்ட பெறுமதி 1972ஆம் ஆண்டில் 2.0 சதவீதமாக விளங்க இவ்வாண்டில் 0.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. குடிசைக் கைத்தொழிலின் வெளியீடானது 29 5 சதவீத மாகக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டியது. இதற்கு சிறுகைத் தொழில்கள் திணைக்களத்தினல் நிருவகிக்கப்பட்ட புடவைக் கைத்தொழில்களின் உற்பத்தி அதிகரித்தமையே காரணமாகும். தயாரிப்புக் கைத்தொழில்களுக்கான பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பானது, 1972ஆம் ஆண்டில் 14.9 சதவீத அதிகரிப்பைக்கொண்டிருக்க இவ்வாண்டில் 16.7 சதவீதத்தால் அதிகரித்தது.

**கட்டட ஆக்கம்.**

ஆக்கற் கைத்தொழில்கள், 1972ஆம் ஆண்டில் 8.1 சதவீதம் வீழ்ச்சி யுற்றிருக்க, இவ்வாண்டில் 2.2 சதவீத வளர்ச்சியைக் காட்டியது, இவ்வதிகரிப் புக்கு அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்க வேலைகளில் ஏற்பட்ட அதிகரித்த செலவீடே காரணமாகும்.

**பணிகள்.**

பணிகள் தொடர்பான துறையில் உண்மை நியதிகளின்படி நோக்குமிடத்து, கூட்டப்பட்ட பெறுமதியானது 1972ஆம் ஆண்டில் 3.7 சதவீதமாக விளங்க, இவ்வாண்டில் 4.1 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், அரசாங்க, நிர்வாகம் பாதுகாப்பு, வங்கித்தொழில், காப்புறுதி என்பவற்றில் அதிகரிப்புப் பதிவு செய்யப்பட்டதுடன், வர்த்தகம், போக்குவரத்துத் துறைகளில் மிதமான அதிகரிப்புகள் பதிவுசெய்யப்பட்டன. உள்நாட்டு வேளாண்மை வெளி யீட்டின் அதிகரிப்பானது வர்த்தகம், போக்குவரத்துத் துறைகள் வளர்ச்சி யடைவதற்குப் பெருந்துணைபுரிந்தது.

**3 காரணிச் செலவு விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி.**

நடைமுறை விலைகளின்படியான உற்பத்திப்பெறுமதி.

நடைமுறைக் காரணிச்செலவு விலைகளின்படியான மொத்தத்தேசிய உற் பத்தியின் மதிப்பீடுகள், அட்டவணை 11 (அ) 3இல் சுருக்கித்தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II (அ) 3

### நடைமுறைக் காரணிச் செலவு விலைகளின்படி, மொத்தத் தேசிய உற்பத்தி

| துறைகள் | 1971 | 1972 | 1973 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (ப. இ. ரூ.) | | | 1972 | 1973 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் என்பன | 3,893 | 4,119 | 5,026 | + 5.8 | + 22.0 |
| 2. தயாரிப்புத் தொழில், சுரங்கத் தொழிலும் பார்க் குழித் தொழிலும், மின்சாரம், வாயு என்பன | 1,633 | 1,859 | 2,380 | +13.8 | + 28.0 |
| 3. கட்டடவாக்கம் | 751 | 711 | 802 | − 5.3 | + 12.8 |
| 4. வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் | 5,689 | 6,118 | 7,057 | + 7.5 | + 15.3 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 11,966 | 12,807 | 15,265 | + 7.0 | + 19.2 |
| 6. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் | − 138 | − 137 | − 111 | — | — |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி | 11,828 | 12,671 | 15,154 | + 7.1 | + 19.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1973ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தியானது, நடைமுறைக் காரணிச் செலவு விலைகளின்படி 19.6 சதவீதத்தால் அதிகரித்ததென்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்பானது 7.1 சதவீதமாகக் காணப்பட்டது.

மீன்பிடித்தொழில் வேளாண்மை காட்டுத்தொழில் ஆகியவற்றில் கூட்டப்பட்ட பெறுமதி, 22.0 சதவீதத்தால் அதிகரித்தது. 1972ஆம் ஆண்டில் இத் தொழில்களுக்கான அதிகரிப்பானது, 5.8 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், உப-உணவுப்பயிர்கள், றப்பர், சிறிய ஏற்றுமதிப்பயிர்கள், நெல் ஆகியவற்றில் கணிசமான அதிகரிப்புகள் பதிவுசெய்யப்பட்டன. இப்பயிர்களைப் பயிரிடுவோர் பெற்ற கூடியவிலைகளே இதற்குக்காரணமாகும்.

1973ஆம் ஆண்டில் காணப்பட்ட உயர்ந்த விலைகளே றப்பர் உற்பத்தி அதிகரிப்பிற்குக் காரணமாகும். இது 1972ஆம் ஆண்டிலிருந்த மட்டத்திலும் கிட்டத்தட்ட 10 சதவீதத்தால் உயர்ந்து காணப்பட்டது.

மேலும் 1973ஆம் ஆண்டில் உப-உணவுப் பயிர்களின் உற்பத்திப் பெறுமதியானது, 138.6 சதவீதத்தால் அதிகரித்தது. இதுபயிரிடுவோர் இப்பயிர்களுக்குப் பெற்ற அதிகரித்த விலைகளையே காட்டுகிறது

சிறிய ஏற்றுமதிப்பயிர்களின் கூட்டப்பட்ட பெறுமதி 69.2 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிடுகையில் 1972இல் ஏற்பட்ட அதிகரிப்பு 31 9 சதவீதமாகும்.

நெல்லைப்பொறுத்தவரையில் 1972 ஆம் ஆண்டு மட்டத்திலேயே அதன் உற்பத்தி விளங்கிய நிலையிலும் கட்டிலாச் சந்தைக்கு வந்த நெல்லின் அளவு 1972இல் 367 இலட்சம் புசல்களில் இருந்து 1973இல் 400 இலட்ச புசல்களாக அதிகரித்தது. கட்டில்லாச் சந்தையில் உற்பத்தியாளரின் நெல்லின் விலை 1973இல்

ஒரு புசலின் விலை ரூ. 14.83இல் இருந்து ரூ. 24.24 ஆக உயர்ந்தது. இது 63 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது.

நடைமுறை விலைகளில் உள்நாட்டு வேளாண்மையின் கூட்டப்பட்ட பெறுமதி 1973இல் 28.8 சதவீதத்தால் அதிகரித்து வேளாண்மைத்துறையின் மொத்தப் பெறுமதியில் 68.8 சதவீதப் பங்கை வகித்தது. 1972இல் உள்நாட்டு வேளாண்மையின் கூட்டப்பட்ட பெறுமதியில் 8.3 சதவீதத்தால் அதிகரித்து வேளாண்மை மொர்த்தப் பெறுமதியில் 65.2 சதவீதப்பங்கை வகித்தது.

1973இல் ஏற்றுமதி வேளாண்மை 9.3 சதவீதத்தால் அதிகரித்து றப்பரிலும் சிறிய ஏற்றுமதிப் பயிர்களிலும் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளைப் பிரதிபலிக்கிறது. 1972இல் ஏற்றுமதி வேளாண்மை 1.5 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது

1973இல் தயாரிப்பு, சுரங்கத்தொழிலும் பார்க்குழித் தொழிலும், மின் சாரம், வாயு ஆகியவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி 28.0 சதவீதமாய் விளங்கியது. ஒப்புநோக்குகையில் 1972இல் இல் அதிகரிப்பு 13.8 சதவீதமாகும். தொழிற்சாலைக் கைத்தொழில்களிலும் சிறுகைத்தொழில்களிலும் பெற்ற பெறுமதி 7.3 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிடுகையில் 1972இல் 11.9 சதவீதத்தால் அதிகரித்தது. சிறுகைத்தொழில்களில் பெற்ற வரவுகள் 1972இலும்பார்க்க 42.1 சதவீதம் உயர்ந்திருந்தது. இது சிறுகைத்தொழிற் திணைக்களத்தினுல் நிருவகிக்கப்பட்ட புடவைக் கைத்தொழில்களின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவினுல் நிகழ்ந்ததாகும். தேசிய புடவைக் கூட்டுத்தாபனம், பெருமளவில் நெசவு நூலை இவற்றிற்குக் கிடைக்கச்செய்தமையே இவ்விரிவான நடவடிக்கைகளுக்குத் துணைநின்றது 1972இல் நெசவு நூலின் வெளியீடு 89,74,000 இருத்தல்களாகவிருந்து 1973இல் 1,05.53,000 இருத்தல்களாக உயர்ந்தது.

தொழிற்சாலைக் கைத்தொழில்களின் பெறுமதி 4.1 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்புநோக்குகையில் 1972இல் ஏற்பட்ட அதிகரிப்பு 11.6 சதவீதமாக இருந்தது. எனவே 1973இல் நடைமுறை விலைகளில் தொழிற்சாலை கைத்தொழில்களின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் 1972 உடன் ஒப்பிடுகையில் பெருமளவில் வீழ்ச்சியுற்றது. தயாரிப்புத் துறையின் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் அரசாங்கத்துறை கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் மொத்த வெளியீட்டிற்குப் பண அடிப்படையில் வழங்கிய அதிகரித்த தொகையேயாகும். நடைமுறை விலைகளில் மொத்த வெளியீட்டின் பெறுமதியில் இவற்றின் பங்கு 1972இல் 35.6 சதவீதமாகவிருந்து 1973இல் 42.8 சதவீதமாக உயர்ந்தது

உண்மையான நியதிகளின்படி பார்க்கையில் சுரங்கப் பார்க்குழித் துறையின் பெறுமதி 1973இல் ரூ. 3,236 இலட்சமாக விளங்கியது. ஒப்புநோக்குகையில் 1972இல் ரூ. 951 இலட்சமாக விளங்கியது. இரத்தினக்கல் அகன்றெடுக்கும் தொழில் விரிவுபடுத்தப்பட்டமையே இவ்வதிகரிப்பிற்குக் காரணமாகும். இது ஒன்றே 1973இல் ரூ. 2,342 இலட்சத்திற்கு வகை கூறியது. ஒப்புநோக்குகையில் 1972 இல் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 123 இலட்சமாக விளங்கியது.

கட்டடவமைப்பின் பெறுமதி 1973இல் 12.8 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்புநோக்குகையில் 1972இல் 5.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1971இலும் 1972இலும் ஏற்பட்ட பின்னடைவில் இருந்து கட்டட ஆக்கநடவடிக்கை 1973 இல் சிறிதளவால் முன்னேறியது. கட்டடப் பொருட்கள் ஓரளவு அதிகரித்த நிலையில் கிடைக்கத்தக்கதாய் இருந்தமையே இதற்குக் காரணமாகும்.

பணித்துறைகளின் பெறுமதி 15.3 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிடுகையில் 1972இல் ஏற்பட்ட அதிகரிப்பு 7 5 சதவீதமாகும். முதன்மைத் துறையில் சிறியவெளியீடே இருந்த நிலையிலும் பணநியதிகளின் அதிகரிப்பில் உயர்ந்த வீதம் காணப்பட்டதற்கு 1973இல் மொத்த விலையிலும் சில்லறை விலையிலும் நிலவிய உயர்வே காரணமாகும். மொத்த சில்லறை வர்த்தகத்திலும் போக்குவரத்திலும் களஞ்சியப்படுத்தலிலும் போக்குவரத்து தொடர்புகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புகளின் பெறுமதி 23 7 சதவீதத்தாலும் 14.4 சதவீதத்தாலும் முறையே அதிகரித்தன. வங்கித்துறையும் காப்புறுதித்துறையும் 15.1சதவீதத்தால் அதிகரித்தன. 1973இல் திறக்கப்பட்ட வங்கிகளின் புதிய கிளைகள் 198 ஆகும். இது வேளாண்மைப் பணி நிலைகளிலுள்ள 99 கிராமிய வங்கிகளையும் 79 இலங்கை வங்கித் துணை அலுவலகங்களையும் ஏனைய 20 வங்கிக் கிளைகளையும் உள்ளடக்கும்.

### 4 1959ஆம் ஆண்டு காரணிச்செலவு விலைகளிலும், உண்மை வருமான அடிப்படையிலுமான மொத்தத் தேசிய உற்பத்தி

அட்டவணை 11 (அ) 4 ஆவது, 1971ஆம், 1973ஆம் ஆண்டிற்கான மொத்தத் தேசிய உற்பத்தியினை 1959ஆம் ஆண்டு காரணிச் செலவு விலைகளில் தருகின்றது. உண்மை நியதிகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியானது 1972ஆம் ஆண்டி

**அட்டவணை II (அ) 4**

**காரணிச் செலவு விலைகளிலான (1959) மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறைகள் | 1971 | 1972 | 1973 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் 1972 | 1973 |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | | |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் என்பன ... | 3,375 | 3,478 | 3,388 | + 3.1 | — 2.6 |
| 2. தயாரிப்புத் தொழில், சுரங்கத்தொழில், பார்க் குழித்தொழில், மின்சாரம், வாயு என்பன .. | 1,474 | 1,499 | 1,715 | + 1.7 | + 14.4 |
| 3. கட்டடவாக்கம் .. | 550 | 505 | 516 | — 8.1 | + 2.2 |
| 4. வர்த்தகம்,போக்குவரத்து,ஏனைய பணிகள் ... | 4,457 | 4,619 | 4,808 | + 3.7 | + 4.1 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 9,856 | 10,102 | 10,426 | + 2.5 | + 3.2 |
| 6. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் .. | - 76 | - 72 | - 44 | — | — |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 9,779 | 10,030 | 10,383 | + 2.6 | + 3.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

லும் பார்க்க 3.5 சத வீதத்தால் உயர்ந்து காணப்படுகின்றது. 1972ஆம் ஆண்டில், 2.6 சத வீத அதிகரிப்பே காணப்பட்டது. 1972, 1973 ஆகிய இரண்டு ஆண்டுக்குரிய சராசரி அதிகரிப்பான 3.1 சத வீதம், 1962ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குரிய 4.3 சத வீதமான சராசரி அதிகரிப்பிலும் குறைவானதாகும்.

மேலும், வேளாண்மை, காட்டுத் தொழில், மீன்பிடித் தொழில் ஆகியவற்றிற்கான வெளியீடானது, 1972ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பான 3.1 சத வீதத்துடன் ஒப்பிடுகையில், நடைமுறை விலைகளின்படி, 2.6 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் உண்மை நியதிகளின்படி ஏற்றுமதிக்கான வேளாண்மையின் வெளியீடானது, 9.5 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றுக் காணப்பட, உள்நாட்டிற்கான வேளாண்மை வெளியீடானது 2.9 சத வீதத்தால் அதிகரித்தது. 1972ஆம் ஆண்டில் ஏற்றுமதிக்கானதும், உள்நாட்டிற்கானதுமான வேளாண்மை முறையே 2.8 சத வீதத்தாலும் 3.3 சத வீதத்தாலும் அதிகரித்தது.

1973ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சியினால், மொத்த வேளாண்மை உற்பத்தியில் ஏற்றுமதி வேளாண்மையின் பங்கு பெருமளவு வீழ்ச்சியடைந்தது. மேலும் முன்பு குறிப்பிட்டதுபோல உப-உணவுப்பயிர்கள், றப்பர், சிறிய ஏற்றுமதிப் பொருட்களின் வெளியீட்டில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பானது தெங்கு உற்பத்தியிலும், கால்நடைப் பொருட்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மேலாக ஈடுசெய்தது.

1972ஆம் ஆண்டு 1.7 சத வீதமாக இருந்த சுரங்கத் தொழில், பார்க் குழித் தொழில் மின்சாரம் உள்ளடங்கிய தயாரிப்புத் தொழிலின் உண்மையான வெளியீடு இவ்வாண்டில் 14.4 சத வீதத்தால் அதிகரித்தது.

தெங்கு, றப்பர், தேயிலை உற்பத்தி தவிர்ந்த தயாரிப்புத் தொழிற்துறை 1972ஆம் ஆண்டில் 2.3 சத வீதமாக விளங்க, இவ்வாண்டில் 3.0 சத வீதத்தால் அதிகரித்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்கள் 0.5சதவீதமான ஆகக்குறைந்த அதிகரிப்பினையே காட்டின. எவ்வாறாயினும், குடிசைக் கைத்தொழிலானது, கூட்டுறவு நிலையங்கள், சிறு கைத்தொழில்கள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்டு வந்த ஏனைய புடவைக் கைத்தொழில் நிலையங்களால் தயாரிக்கப்பட்ட புடவைகளின் வெளியீட்டில் ஏற்பட்ட விரிவினால் 29.5 சத வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது

சுரங்கத் தொழில், கற்பார்த் தொழிலின் நடைமுறை விலைகளின்படி பெற்ற பெறுமதிப்படி 294.4 சத வீதத்தால் அதிகரித்துக் காணப்பட, 1972ஆம் ஆண்டில் 1.4 சத வீதத்தால் மாத்திரமே அதிகரித்தது. இரத்தினக்கல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பே இத்துறையில் பெரும் அதிகரிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். மேலும் மின்சாரம், வாயு, நீர் நலத்துறைப்பணிகளின் வெளியீடானது 1972ஆம் ஆண்டில் 8.4 சத வீதத்தால் அதிகரிக்க இவ்வாண்டில் 1.0 சத வீதத்தால் அதிகரித்தது 1972ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 1973ஆம் ஆண்டில் மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட குறைந்த வீத அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணமாகும்,

1972ஆம் ஆண்டிலும் பார்க்க, ஆக்கத்துறையிலான சாதனை ஓரளவு சிறப்பாகக் காணப்பட்டது. உண்மை நியதிகளின்படி இத்துறையானது 2 2 சத வீதத்தால் அதிகரித்தது. ஆனல். 1972ஆம் ஆண்டில் 8.1 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது.

முழுமையாகப் பார்க்குமிடத்து, பணிகள் துறையானது, 1972ஆம் ஆண்டில் 3.7 சதவீதமாகக் காணப்பட இவ்வாண்டில் 4.1 சதவீதத்தால் அதிகரித்தது. வர்த்தகம், போக்குவரத்துக்கான துறையின் வெளியீடானது, முன்பு குறிப்பிட்டதுபோல குறிப்பாக ஆக்கத்துறையின் முன்னேற்றகரமான சாதனையாலும், உள்நாட்டு வேளாண்மைத்தொழிலில் இருந்து கூடியளவு பொருட்கள் கிடைக்கப்பெற்றமையினலும் குறிப்பாக உப-உணவுப் பயிர்கள், கட்டிலாச் சந்தை அரிசி போன்றவற்றினல் அதிகரித்தது.

வங்கித்துறைக்கான வெளியீடானது, வர்த்தக வங்கிகளின் கிளைகள், கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை என்பன அதிகரித்தமையால் 1973ஆம் ஆண்டில் 4.6 சதவீதத்தால் அதிகரித்தது. 1972ஆம் ஆண்டில், 1971ஆம் ஆண்டிலும் பார்க்க 5.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

தேசிய வருமான மட்டத்துடன் பார்க்கையில், இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஆகியவற்றின் பெறுமதி முக்கியமான அம்சமாகையால், நடைமுறை விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகள் ஏற்றுமதி, இறக்குமதி விலைகளின் மாற்றங்களுடன் ஒப்பிட்டு மதிப்பிடப்படல்வேண்டும்.

பின்னிணைப்பு 11 அட்டவணை 6இல் வர்த்தக மாற்றுவிகிதத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைவிலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியினை அமைப்பதன்மூலம் உண்மை வருமானம்பெறப்பட்டமை காட்டப்பட்டுள்ளது.

1973ஆம் ஆண்டில், இலங்கையின் வர்த்தக மாற்றுவிகிதம் மேலும் 13.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி விலைகள் 16.1 சதவீதத்தால் மாத்திரமே அதிகரிக்க இறக்குமதி விலைகள் 32.3 சதவீதத்தால் கணிசமானளவு உயர்வடைந்தது. இவ்வாருக வர்த்தக மாற்றுவிகிதத்தில் எற்பட்ட பாதகமான விளைவானது (1959ஆம் அடிப்படை ஆண்டிலிருந்து கணிக்கப்பட்டது.) 1973ஆம் ஆண்டில் ரூ. 11,700 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. இப்பாதகமான விளைவானது, 1972ஆம் ஆண்டில் ரூ 9,700 இலட்சமாகக் காணப்பட்டது. வர்த்தக மாற்றுவிகிதத்திற்கான முறையில் மாற்றி அமைக்கப்பட்டவுடன், 1973ஆம் ஆண்டில் உண்மைத் தேசிய வருமானம் ரூ. 92.120 இலட்சமாக விளங்க, 1972ஆம் ஆண்டில் ரூ. 90,600 இலட்சமாக விளங்கியது. 1972ஆம் ஆண்டில் இவ்வுயர்வானது, 2.7 சதவீதமாக இருக்க, இவ்வாண்டில் 1.7 சதவீதமாகக் காணப்பட்டது. அதே அடிப்படையில், தனியாளுக்கான உண்மைத் தேசிய வருமானம், 1972ஆம் ஆண்டில் 0.7 சதவீதமாக அதிகரித்துக்காணப்பட, 1973ஆம் ஆண்டில் 0.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

5. **மொத்தத் தேசிய செலவு.**

அட்டவணை 11 (அ) 5 ஆனது, மொத்தத் தேசிய செலவீட்டின் முக்கிய மூலக்கூறுகளைச் சுருக்கித் தருகின்றது.

**அட்டவணை II (அ) 5**

**நடைமுறைச் சந்தை விலைகளின்படியான மொத்தத் தேசிய செலவு**

| விடயங்கள் | 1971 | 1972 | 1973 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் 1972 | 1973 |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | | |
| 1. தனியார் நுகர்வு .. | 8,849 | 9,773 | 12,203 | + 10.4 | + 24.9 |
| 2. அரசாங்க நுகர்வு ... | 1,790 | 1,924 | 2,043 | + 7.5 | + 6.2 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 2,249 | 2,118 | 2,630 | — 5.9 | + 24.2 |
| 4. மொத்த உள்நாட்டுச் செலவினம் ... | 12,888 | 13,814 | 16,876 | + 7.2 | + 22.2 |
| 5. வெளிநாட்டில் தேறிய முதலீட்டம் ... | - 209 | - 269 | - 161 | — | — |
| 6. கழிவு: பண்ணுட்டுக் கொடைகளினதும் மாற்றல்களினதும் தேறிய பெறுகைகள் ... | - 74 | - 48 | - 84 | — | — |
| 7. மொத்தத் தேசிய செலவு .. | 12,606 | 13,497 | 16,630 | + 7.1 | + 23.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1973ஆம் ஆண்டில் மொத்தத் தேசியச் செலவானது, 23.2 சதவீதத்தால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்பானது, 7.1 சதவீதமாகக் காணப்படுகிறது. முழுமையாக நோக்குகையில் இவ் அதிகரிப்பு 1973ஆம் ஆண்டில் ரூ. 31,330 இலட்சமாகவும், 1972ஆம் ஆண்டில். ரூ, 8920 இலட்சமாகவும் உள்ளது.

1973ஆம் ஆண்டில் மொத்தத் தேசியச் செலவில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்புக்கு, இவ்வாண்டு காலப்பகுதியில் காணப்பட்ட மிக உயர்ந்த விலைகள் காரணமாகும். 1973ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தியை வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியுடன் இணைத்து நோக்குகையில் விலைகளில் சராசரியாக 16 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அது எடுத்துக்காட்டுகிறது, இவ்வாறாக, விலைகளில் ஏற்பட்ட 16 சதவீத அதிகரிப்புக்கு ஏற்ப மொத்தத் தேசியச் செலவில் ஏற்பட்ட 23.2 சதவீத அதிகரிப்பைச் சீராக்கம்செய்யின் உண்மை அடிப்படையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் நோக்குமிடத்து 7 சதவீதமாக அமையுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

நடைமுறைச் சந்தைவிலைகளின்படி, மொத்தத் தேசியச்செலவில் ஏற்பட்ட அதிகரிப்பானது, நுகர்வுச்செலவு 21.8 சதவீதத்தால் அதிகரித்தமையையும், உள்நாட்டு மூலதன ஆக்கம் 24.2 சதவீதத்தால் அதிகரித்ததையும் எடுத்துக் காட்டுகின்றது.

**நுகர்வோர் கேள்வி**

1973ஆம் ஆண்டில் தனியாருக்கான நுகர்வு ரூ. 24,300 இலட்சத்தால் அல்லது 24.9 சதவீதத்தால் அதிகரித்து. நுகர்வுக்கான செலவீட்டின் பாகு பாடானது, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதான செலவு 34.9 சதவீதத்தால் அதிகரித்ததையும், இறக்குமதியிலான செலவு 1973 ஆம் ஆண்டில் 14.6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதையும் எடுத்துக்காட்டு கின்றது. இதற்கு மாருக, 1972ஆம் ஆண்டில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் செலவு 14.6 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட, உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் செலவு 13.6 சதவீதத் தாலேயே அதிகரித்தது.

அட்டவணை 11 (அ) 6ஆனது, நடைமுறைச் சந்தை விலைகளின்படியான, தனியார் நுகர்வுச் செலவை எடுத்துக்காட்டுகின்றது.

**அட்டவணை II (அ) 6**

**நடைமுறைச் சந்தை விலைகளின்படி தனியார் நுகர்வுச் செலவு***

| விடயங்கள் | 1972 | | 1973 | |
|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | 16ம் வரிசையின் சதவீதம் | தொகை ப. இ. ரூ. | 16ம் வரிசையின் சதவீதம் |
| 1. உணவு ... | 5,116 | 52.3 | 7,054 | 57.8 |
| 2. குடிபானங்கள் ... | 329 | 3.4 | 351 | 2.9 |
| 3. புகையிலை ... | 576 | 5.9 | 638 | 5.2 |
| 4. ஆடைகளும் ஏனைய சொந்தப் பொருட்களும் .. | 958 | 9.8 | 1.032 | 8.5 |
| 5. வாடகை, வரி, நீர்க் கட்டணங்கள் | 412 | 4.2 | 420 | 3.4 |
| 6. எரிபொருளும் வெளிச்சமும் ... | 303 | 3.1 | 316 | 2.6 |
| 7. தளபாடம், வீட்டுப் பொருட்கள் | 257 | 2.6 | 289 | 2.4 |
| 8. வீட்டுப் பாவனை நடவடிக்கைகள் | 674 | 6.9 | 719 | 5.9 |
| 9. சொந்தக் கவனிப்புகளும் நலத்துறைச் செலவுகளும் | 253 | 2.6 | 247 | 2.0 |
| 10. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் .. | 968 | 9.9 | 1,033 | 8.5 |
| 11. பொழுதுபோக்கும் களியாட்டமும் ... | 476 | 4.9 | 514 | 4.2 |
| 12. பல்வகைப் பணிகள் .. | 342 | 3.5 | 344 | 2.8 |
| 13. வெளிநாட்டில் வதிவோர்களின் செலவினம் .. | 20 | 0.2 | — | — |
| 14. கழிவு: நாட்டிலுள்ள வதிவற்றோர்களின் செலவினம் | -486 | - 5.0 | - 557 | - 4.6 |
| 15. கழிவு: அரசாங்க உள்ளூர்க் கொள்வனவு .. | -425 | - 4.3 | - 197 | - 1.6 |
| 16. குடும்பங்களினதும், இலாபமற்ற தனியார் நிலையங்களினதும் நுகர்வுச் செலவினம் ... | 9,773 | 100.0 | 12,203 | 100.0 |

மூலம் இலங்கை மத்திய வங்கி.

* "இப்பாகுபாடு தேசியக் கணக்குகளினதும் அதற்குத் துணையான அட்டவணைகளினதும் ஒழுங்குமுறை" ஐ. நா. நியூயோர்க்கு, 1964, என்பதனை அடிப்படையாகக் கொண்டது.

மேலேயுள்ள, அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டதுபோல, நுகர்வுக்கான அமைப்பானது, 1973ஆம் ஆண்டில் தனியார் நுகர்வில் உணவு, குடிபானங்கள், புகையிலை ஆகியவற்றின் செலவானது, 65.9 சதவீதத்தையும், 1972ஆம் ஆண் டில் 61.6சதவீதத்தையும்கொண்டிருந்ததைக் காட்டுகின்றது. 1972ஆம் ஆண்டில்,

உணவில் ஏற்பட்ட செலவானது, 57.8 சதவீதத்திற்கு அதிகரித்துக்காணப்படக் குடிபானங்கள், புகையிலைக்கான பங்கு வீழ்ச்சியைக்காட்டியது ஏனைய விடயங்களிலான செலவின் பங்கு 1972ஆம் ஆண்டிலும் பார்க்கக் குறைவானதாகும்.

தனியார் நுகர்வில் ஏற்பட்ட ரூ. 24,300 இலட்ச அதிகரிப்பில், உணவு, குடிபானங்கள், புகையிலை ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு மாத்திரம் ரூ. 20,220 இலட்சமாகக் காணப்பட்டது. அது கிட்டத்தட்ட 83 சதவீதமாகும்.

6. மொத்த நிலையான மூலதன ஆக்கம்.

பின்னிணைப்பு 11 அட்டவணை 7இல் மொத்த நிலையான மூலதன ஆக்கம் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளது.

1973ஆம் ஆண்டில் மொத்த நிலையான மூலதன ஆக்கத்தின் கூட்டுத் தொகையானது, ரூ. 2,870 இலட்சத்தால் அல்லது 13.0 சதவீதத்தால் அதிகரித்தது தனியார் துறையின் மூலதன ஆக்கம் (அரசாங்கத்துறையில் உள்ள கூட்டுத்தாபனங்கள் உட்பட) ரூ. 2,140 இலட்சத்தால் அதிகரித்துக்காணப்பட அரசாங்கத்துறையிலான மூலதன ஆக்கம் ரூ 730 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. முன்பு குறிப்பிட்டதுபோல, இத்தகைய அதிகரிப்புகளை, இறக்குமதி

அட்டவணை II (அ) 7

அரசாங்கத்தினது நிலையான மூலதன ஆக்கத்தின் கைத்தொழிற் பாகுபாடு (அ)

| துறைகள் | 1972 தொகை (ப. இ. ரூ.) | 1972 மொத்தத்தின் சதவீதம் | 1973 தொகை (ப.இ.ரூ.) | 1973 மொத்தத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... | 196 | 37.9 | 198 | 33.6 |
| 2. தயாரிப்புத் தொழில் ... | 15 | 2.9 | 9 | 1.5 |
| 3. மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 14 | 2.7 | 17 | 2.9 |
| 4. போக்குவரத்து களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்பு | 121 | 23.4 | 165 | 28.0 |
| 5. குடியிருப்புகளின் உடைமை ... | 16 | 3.1 | 11 | 1.9 |
| 6. பொது நிருவாகம் .. | 80 | 15.5 | 101 | 17.1 |
| 7. பணிகள் ... | 75 | 14.5 | 89 | 15.1 |
| மொத்தம் | 517 | 100.0 | 590 | 100.0 |

மூலம் இலங்கை மத்திய வங்கி.

(அ) இலங்கை அரசாங்கத்தின் 1971/72 ஆம் ஆண்டுக்கான செலவின் மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டவை (12 மாத விகிதசம அடிப்படையில்)

செய்யப்பட்டதும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுமான பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வுடன் இணைத்து நோக்கல் வேண்டும். முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதி விலைகள் மத்திய வங்கிக்குறிகாட்டிகளின்படி 1973ஆம் ஆண்டில் 139.9 ஆகவும் (1967-100) 1972ஆம் ஆண்டில் 120.3 ஆகவும் இருந்து, 16.2 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இவ்வாறாக, 1973ஆம் ஆண்டில் உண்மை நியதிகளின்படி நிலையான மூலதன ஆக்கம் 2 சத வீதத்தால் மிகச்சிறியளவால் அதிகரித்தது.

***அரசாங்கத்துறை.***

அரசாங்கத்துறையின் நிலையான மூலதன ஆக்கம் 14.2 சதவீதத்தால் அதிகரித்தது. 1972ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 4.8 சதவீதமாக விளங்கியது. பின்வரும் அட்டவணையானது, அரசாங்கத்தினுடைய மூலதன ஆக்கத்தை கைத்தொழிலுக்கான பிரிவுகளின்கீழ் பாகுபடுத்திக்காட்டுகின்றது.

மொத்த முதலீட்டில் வேளாண்மை, காட்டுத்தொழில், மீன்பிடித் தொழில் என்பன 33.6 சதவீதத்தையும் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்பு என்பன 28.0 சதவீதத்தையும் கொண்டிருந்தது. மிகுதித்தொகையில் 17.1 சதவீதம் அரசாங்க நிருவாகத்திலும், 15.1 சதவீதம் பணிகளிலும் முதலீடு செய்யப்பட்டது.

***தனியார் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும்.***

பின்வரும் அட்டவணை 11 (அ) 8இல் காட்டப்பட்டவாறு, தனியார் துறையினதும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் மொத்த நிலையான மூலதன ஆக்கம் சொத்துக்களின் தன்மைக்கேற்ப பாகுபடுத்தப்பட்டுள்ளது.

1973ஆம் ஆண்டில், தனியார் துறையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும், நிலையான மூலதன ஆக்கம் 12.7 சதவீதத்தால் அதிகரித்திருக்க, 1972ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்பு, 2.6 சதவீதமாகக் காணப்பட்டது. 1973ஆம் ஆண்டில் அதிகரித்த செலவீடானது இயந்திரங்களிலும், பொறிகளிலும் ரூ. 3,790 இலட்சமாகவும், கட்டடங்களிலும் மற்றைய ஆக்க வேலைகளிலும் ரூ. 10,290 இலட்சமாகவும் காணப்பட்டமையே 1973ஆம் ஆண்டில் நிலையான ஆக்கத்தில் அதிகரிப்பு ஏற்படப் பெருமளவு காரணமாகும். போக்குவரத்துத் தொடர்பான இயந்திரங்களின்மீதான முதலீடு ரூ. 330 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை II (அ) 8

## இருப்புச் சொத்துக்களின் வகைப்படி தனியார் துறையின் (அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுட்பட) நிலையான மூலதனவாக்கம்

| இருப்புச் சொத்தின் வகை | 1971 | | 1972 | | 1973 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை ப. இ. ரூ.) | மொத்தத்தின் சதவீதம் |
| பெருந்தோட்டச் செய்கையும் மறு நடுகையும் காணி அபிவிருத்தியும் | 111 | 6.7 | 112 | 6.6 | 111 | 5.8 |
| கட்டடமும்,ஏனைய கட்டடவாக்கமும் | 993 | 60.3 | 927 | 54.9 | 1,029 | 54.1 |
| பொறித் தொகுதியும் எந்திரங்களும் ... | 287 | 17.4 | 237 | 14.0 | 379 | 19.1 |
| போக்குவரத்துக் கருவிகள் ... | 171 | 10.4 | 278 | 16.5 | 245 | 12.9 |
| ஏனைய மூலதனப் பொருட்கள் ... | 85 | 5.1 | 135 | 8.0 | 139 | 7.3 |
| மொத்தம் ... | 1,647 | 100.0 | 1,689 | 100.0 | 1,903 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: உரிய காலத்தில் தரவினை சில அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் தராததினால், அரசாங்கக் கூட்டுத்தாபனத் துறையில் நிலையான மூலதன அமைப்பைப்பற்றி தனித்தனியே மதிப்பிட முடியாமல் இருக்கின்றது. பொருட்கள் வெளிச்செல்லும் முறையிலிருந்து கணிக்கப்படும் மொத்தத் தனியார்துறை மூலதன அமைப்பில் இருந்து குடியிருப்போரினதும் கூட்டுத்தாபனத் துறைகளினதும் மூலதன அமைப்பின் எஞ்சிய பகுதியின் மதிப்பீட்டைப் பெறும் முறையில் கூட்டுத்தாபனங்களால் தரப்பட்ட தரவுகள் இருந்தும் மதிப்பீடு செய்கிறோம். ஆகவே, இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள தனியார்துறையின் கூட்டுத்தரவு, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் தனியார் துறையினதும் முன்னைய ஆண்டுகளின் கூட்டுமொத்தத் தொகையுடன் ஒப்பிடத்தக்கதாய் இருக்கிறது.